# 52. பாலின சமத்துவம் அன்றும் இன்றும்

**முனைவர். க. கலாவதி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயமுத்தூர்

***"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்***
***அறிவினில் ஓங்கி இவ்வையந் தழைக்குமாம்"***
*- பாரதியார்*

சமத்துவம் என்பது ஒரு நாட்டின் கலாச்சாரத்தைப் பொறுத்தே அமைகின்றது ஆண், பெண் சமத்துவமே ஒரு நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் என்பது திண்ணமாகும். உலக வாழ்க்கையின் இயக்கத்திற்கு இருபாலரும் சமமான பங்கையே அளிக்கின்றனர். ஒருவர் இல்லாமல் மற்றொருவரின் இயக்கம் என்பது சாத்தியப்படாத ஒன்று. நம்முடைய புராணக் கதைகளில் மட்டுமல்லாமல், சிவன் பாதி சக்தி பாதி எனும் அர்த்தநாரீஸ்வரரின் உருவம் இக்கருத்தைதான் வலியுறுத்துகின்றது.

சம உரிமை என்பது அடிப்படை மனித உரிமையாகும். இது இருபாலருக்கும் ஒன்று. ஆண் பெண் சமத்துவம் என்பது ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும், நாட்டிற்கும் வேறுபடுகிறது. இந்த சமூகம் ஆணுக்கும், பெண்ணுக்கும் சில வரைமுறைகளை வரையறுத்து அந்த வரையறைக்குள் இருவரின் பங்கு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. இன்னமும் எதிர்பார்க்கப்படுகிறது.

கால மாற்றத்தில் இந்த நிலை மாற இருவரும் வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட சமயுரிமை என்ற குரல் வலுவானது.

இந்த சமயுரிமையும், இந்த சமுதாயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டான பங்கும் எதன் அடிப்படையில் கோரப்படுகிறது என்பதை அனைவரும் புரிந்துக் கொண்டனரா என்பதுதான் கேள்விக் குறியாக உள்ளது.

சமஉரிமையை நிராகரிப்பதாலும், தவறாக புரிந்துக் கொள்வதாலும் சமுதாயத்தில் பல பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. இன்றைய சூழலில் சமயுரிமை என்ன என்பதை அனைவரும் புரிந்து கொண்டு செயல்பட்டால் நாடு முன்னேறும். உலகில் ஆண் - பெண் சமநிலையில் எப்போதையும் விட இப்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக புதிய அறிக்கை ஒன்று கூறுகிறது.

சங்க காலத்தில் பெண்களுக்கு முழுமையான உரிமை கொடுக்கப்பட்டிருந்தது என்றாலும் பெண் என்பவள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடும் இருந்தது. பெண் ஆணைச் சார்ந்து வாழும் ஒரு துணைஉயிர் என்ற ஆணாதிக்கக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே குடும்ப அமைப்பு இருந்துள்ளது. இதனை

***வினையே ஆடவற்கு உயிரே***
***மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே (குறுந்)***

என்ற குறுந்தொகை பாடலால் அறியலாம். சங்க காலத்திற்குப் பின் இந்நிலை மாறி இருபாலரும் பல்துறை அறிவுப் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.





பெண்மை என்பது அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு தொண்டு முதலியன அமைந்த ஒன்று. கரடுமுரடு, அவா, பொறாமை, தன்னலம், சீற்றம் முதலியன ஆண்மைக் குணங்கள்.

உடலமைப்பு தலைவிதியை நிர்ணயிக்கிறது பால் (sex) என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உடலியல் பூர்வமாக இருக்கும் இயற்கை வேறுபாடுகளைக் குறிப்பது. ஆனால் பாலினம் (gender) என்பது ஆண் என்பதாலும், பெண் என்பதாலும் பாலுக்கேற்ப ஒருவரிடம் எதிர்பார்த்துத் திணிக்கப்படும் உணர்வுபூர்வ மனநிலை இயல்புகளைக் குறிப்பது.

**ஆடவர் இயல்பு**

***பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல்:1044)***

பெருமையும் வலிமையும் ஆடவர் இயல்பாகும். இது உலகம் முழுவதும் பொருந்தும்.

**பெண்டிர் இயல்பு**

***அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த***
***நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல்: 1045)***

அச்சம், நாணம், மடன், என்ற முப்பண்புகளும் எக்காலத்தும் பெண்டிற்கு உரியவை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டிருந்தாலும் இன்று இருவருக்கும் இவை பொதுவானதாகவே கருதப்படுகிறது.

**கல்வி**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இருபாலரின் கல்வி அறிவே அடிப்படையாகின்றது. அறிவுச்செல்வத்தின் மூலமே பிற செல்லங்களை அடைய முடியும். அதனால் அன்று முதல் இன்றுவரை கல்விச்செல்வத்தைப் பெறுவதற்கு அனைவரும் முயலுகின்றனர். கல்வியின் அடிப்படை கற்போரிடம் தூய்மை, சேவை மனப்பான்மையைத் தோற்றுவித்தலே ஆகும். அனைத்து நற்பண்புகளும் கல்வியின் வழியாகவே அனைவரும் பெறுகின்றனர் என்றால் அது மிகையன்று கல்வியில்லா உள்ளம் களர்நிலம். அங்கே புல் வளர்ந்திடலாம். ஆனால் நல்லறிவு வளர்வதில்லை.

ஆண்பாற் புலவர்களைப் போன்று பெண்பாற் புலவர்களும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். பாரி மன்னனுக்கு கபிலர் அவைக்களப் புலவராக விளங்கியது போல அதியனுக்கு ஔவையார் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். இன்றைய காலக் கட்டத்திலும் இருபாலரும் கவித இயற்றுதல், பாடல்களை இனிமையாகப் பாடுதல், திரையுலகில் பிரகாசித்தல் ஆகியவற்றில் புகழ் பெற்று விளங்குவதைக் காண்கிறோம்.

சங்ககாலத்தில் ஆண்களும் பெண்களும் கல்வியில் சிறந்து விளங்கினர். இருபால் புலவர்களும் அரசவையை அலங்கரித்தனர். இடைக்காலத்தில் பெண்கல்வி மறுக்கப்பட்டது. 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்று மக்கள் பெண்களுக்கு தீங்கிழைத்தனர். ஆனால் மகாகவி இதனை எதிர்த்துப் போராடி, பெண்கல்வியின் சிறப்பினை எடுத்துரைத்தார்.

***ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று***
***எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்***

***வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற***
***விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்***

என்றுபாடி பெண் கல்விக்கு கண்ணொளி தந்தவர் பாரதியார். இந்நூற்றாண்டில் இருபாலரும் கல்வி பெற்று பல்துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

மேதகு ஜனாதிபதி அப்துல்கலாம் போன்று இருபாலரும் விஞ்ஞானிகளாகவும், திரு.பிச்சை போன்று தொழில்நுட்பத்திலும், கல்பனா சாவ்லா போன்று விண்வெளி ஆராய்ச்சியிலும், தாமஸ் ஆல்வா எடிசன் போன்று புதிய கண்டுபிடிப்புகள் போன்ற அறிவுசார் செயல்களில் இருபாலரும் இன்று பங்கேற்று வெற்றி பெற்று வருகின்றனர்.

## தொழில்

மகளிர் மாட்டுவண்டி ஓட்டி உப்பு விற்கச் சென்ற செய்தி பெரும்பாணாற்றுப்படையில் காணப்படுகின்றது. உமண மகளிர் சகடத்தின் மூக்கணையில் தன் குழந்தையுடன் அமர்ந்து எருதுகளைத் தூண்டி ஓட்டும் வழக்கம் இருந்ததை,

***காடி வைத்த கலனுடை மூக்கின்***
***மகவுடை மகடூஉப் பகடுபுறம் துரப்ப (பெ.பா:57)***

இப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இக்கட்டுரையின் ஆசிரியராகிய நான் (க.கலாவதி) என் தந்தையின் உதவியுடன் மாட்டு வண்டி ஓட்டுதல், உழவோட்டுதல், தொளியடித்தல் போன்ற வேளாண் தொழில்களை செய்துள்ளேன் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

வேளாண்தொழிலில் ஆண்பெண் இருபாலரும் இணைந்து செயல்படுகின்றனர் என்பதை இன்றளவும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். வணிகர்களாகவும், ஐவகை நிலங்களுக்குரிய தொழில்களைச் செய்வதிலும் இருவரும் சமமாகப் பங்கேற்கின்றனர்.

***'ஆசிரியர் பணியே அறப்பணி***
***அதற்கு உன்னை அர்ப்பணி'***

என்ற கவிதை வரிகளுக்கேற்ப இருபாலரும் ஆசிரியர் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஆண்களுக்கு நிகராக மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் பெண் ஊழியர் ரோசி என்பவர் சாதனை படைத்து வருகின்றார்.

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் எங்கண்டியூர் எனும் கடற்கரை கிராமத்தைச் சேர்ந்தவர் கே.சி. ரேகா. நான்கு பெண்குழந்தைகளின் தாயான இவர் இந்தியாவிலேயே ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் ஒரே பெண்மணி என்ற சாதனையைப் படைத்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளாக கணவர் கார்த்திகேயனுடன் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வருகிறவர், ஆழ்கடலுக்குள் சென்றால் சிலசமயம் 4,5 நாட்கள் கழித்துதான் கரைக்குத் திரும்புகிறார்.

அன்று மாட்டுவண்டியை மகளிர் ஓட்டியது போல் இன்றும் மாட்டுவண்டிகளை மகளிர் ஓட்டுகின்றனர். கர்நாடக மாநிலம் 'றப்பள்ளியில் இருந்து பெல்காம் சென்று தற்காலிகமாகக் குடியேறுவதற்காக தங்கள் உடமைகளுடன் மாட்டுவண்டிகளை பெண்களே ஓட்டிச் செல்லும் புகைப்படக்காட்சி ஒன்று தினமணியில் (29.08.17) வெளிவந்துள்ளது. மேலும், பெண்கள் சிற்றுந்துகளையும், பேருந்துகளையும், விமானங்களையும், புகைவண்டிகளையும் இயக்கும் ஓட்டுநர்களாக விளங்குவதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.





## வீரம்

சங்ககாலத்தில் அரசர்களும், குறுநில மன்னர்களும், அவர்களது படைவீரர்களும் வலிமை மிக்க வீரர்களாகத் திகழ்ந்தனர், தங்கள் வலிமையை வெளிப்படுத்தவும், தனது ஆட்சி எல்லையை விரிவுபடுத்தவும், தன்னைப் பழித்துப் பேசியவர்களைப் பழிவாங்கவும் போரை மேற் கொண்டனர். சக்கரவர்த்தி அசோகர் போன்று போர் ஒன்றினையே தன் கடமையாக் கொண்டு வாழ்ந்தவர்களும் இருந்தனர்.

***ஞாயிறு அனையநின் பகைவர்க்குத்***
***திங்கள் அனைய எம் மனோர்க்கே (புறம்:59)***

என்னும் பாடலடிகள் வழி நன்மாறனின் வீரத்தையும்

***எழுஉறழ்திணிதோள் வழுவின்றி மலைந்தோர்***
***வாழக் கண்டன்றும் இலமே (புறம் : 61)***

என்னும் பாடலடிகள் வழி நலங்கிள்ளி சேட் சென்னியின் வீரத்தையும் புலவர்கள் பாடியுள்ளனர். புறநானூற்றுப்பாடல்கள் பல அரசர்களின் வீரத்தை எடுத்துரைப்பனவாகவே அமைந்துள்ளன.

போரில் பங்கேற்பது தங்கள் வாழ்நாளின் பேறு என்று கருதினர். போரில் விழுப்புண் பெறுவது பெருமை என்று கருதப்பட்டது. போரில் விழுப்புண் பெற்று இறந்துபட்ட கரந்தை வீரர்களுக்கு அவர்களின் பெயரும் புகழும் எழுதி மயில்தோகை அணிவித்து நடுகல் எழுப்பப்படும். நாளடைவில் அந்நடுகல்லே பொதுமக்கள் வழிபடும் கோயிலாக மாறிவிடும் என்பதனால் வீரர்கள் தாங்கள் நடுகல்லாக வேண்டும் என விரும்பி போரை மேற் கொண்டனர்.

***நல்அமர்க் கடந்த நாணுடை மறவர்***
***பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்***
***பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகம்:67)***

என்ற பாடல் நடுகல்லின் சிறப்பினை எடுத்தியம்புகின்றது.

***மருவூர் மருங்கின் மறம்கொள் வீரரும்***
***பட்டின மருங்கின் படைகெழு மாக்களும்***
***முந்தச் சென்று முழுப் பலிபீடிகை***
***'வெந்திறல் மன்னற்கு உற்றதை ஒழிக்க' எனக்***
***பலிகொடை புரிந்தோர் வலிக்கு வரம்பு ஆக***
***சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்கு கருந்தலை***
***'வெற்றி வேந்தன் கொற்றம் கொள்க' என***
***நற்பலி பீடிகை நலம்கொள வைத்து ஆங்கு***
***உயிர்ப்பலி உண்ணும் உறுமுக்குரல் முழக்கத்து***
***மயிர்க்கண் முரசொடு வான்பலி ஊட்டி. (சிலம்பு:5)***

தங்களுடைய அரசனுக்கு உற்றதை ஒழிக்க வேண்டும் என்று வீரர்கள் பலிகொடுத்து வழிபட்ட செய்தியை இப்பாடல் எடுத்துரைக்கின்றது. பெண்கள் போரில் பங்கேற்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. இருப்பினும் போர் குறித்த செய்திகளை இல்லில் இருந்தே அறிந்து வந்தனர். தேவை அறிந்து தந்தை, கணவர், மகன் என்ற வரிசையில் போருக்கு அனுப்பி பெருமைபெற்றவர்கள் சங்ககால மகளிர். முதள்நாள் போரில் தந்தை இறந்தார். அடுத்தநாள் போரில் கணவன் இறந்தான். இன்றும் போர்ப்பறை

கேட்கிறது என்ன செய்வது என்று திகைத்தாள் மகனைப் பார்த்து மகிழ்ந்தாள். இப்பெண்ணின் நாட்டுப்பற்றை விளக்கும் பாடல் இதோ,

***இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி***
***வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்***
***பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி***
***ஒருமகன் அல்லது இல்லோள்***
***செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே. (புறம்:279)***

இப்பாடல் ஒரு தாயின் வீரத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

புறமுதுகிடாத வீரனின் முதுமைத் தாயின் மார்பகங்கள் வீரனின் பெருமிதத்தைக் கண்டு பாலூறிச் சுரந்தன என்றால் அத்தாயை என்னென்று கூறுவது. மற்றொரு தாய், என் மகன் போர்க்களத்தில் பகைவர்க்கு அஞ்சி புறமுதுகிட்டு அவன் இறந்தான் என்பது உண்மையானல் அவன் பாலுண்ட என் மார்பை அறுத்தெறிவேன் என்று கூறி நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறாள்.

## விளையாட்டு

வீரவிளையாட்டுகளில், ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் நிலைமை அக்காலத்தில் இருந்தது. வீரவிளையாட்டான 'ஏறு தழுவுதல்' நிகழ்வினை கலித்தொகை குறிப்பிடுகின்றது. ஏறு தழுவி வெற்றி பெற்ற வீரனை மணந்து கொள்வதில் பெண்கள் பெருவிருப்பம் கொண்டனர். இத்தகைய ஏறு தழுவும் வீரவிளையாட்டை பெண்கள் மேற்கொள்ளவில்லையென்றாலும் முறத்தைக் கொண்டு புலியைத் துரத்திய வீரப்பெண்மணி தமிழகத்தில் வாழ்ந்தாள் என்பதில் பெருமைக் கொள்ள வேண்டும்.

உலகம் அறிவியல் வளர்ச்சியை அதிகம் கண்டு கொண்டிருந்தாலும் ஆண் பெண் இருபாலரும் அனைத்துத் துறைகளிலும் சமமாகவே பங்கேற்று வருகின்றனர். வீரவிளையாட்டான வாள் வீச்சில் பஞ்சாப் மாநிலத்தில் ஹுஸ்ரீ யாக பணியாற்றி வரும் அவ்னீத் கவுர் என்பவர் (2017- ஆகஸ்டு) லாஸ் ஏஞ்சலில் நடைபெற்ற துப்பாக்கிச்சுடும் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்று நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார்

சென்னைச் சேர்ந்த பவானி தேவி பென்சிங்கில் நடைபெற்ற உலகப்போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். பளுதூக்கும் போட்டியில் கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப் பதக்கம் பெற்று நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

## கொடை

சங்ககால வள்ளல்கள், மன்னர்கள் மட்டுமன்றி புலவர்களும் கொடைநெறியில் சிறந்து விளங்கினர். இல்லையென வந்தோர்க்கு இல்லை என்று கூறாமல் வழங்கும் கொடைப் பண்பில் ஆண் பெண் இருவரும் சமமாக இருந்தனர். வறுமையில் வாடிய புலவன் பெற்ற பரிசிலைக் கொண்டுவந்து தன் மனையாளிடம் கொடுத்துப் பிறர்க்கு கொடுக்கக் கூறுகின்றான்.

***இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது***
***வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்***
***எல்லோர்க்கும் கொடுமதி - மனை கிழவோயே.***
***(புறம் :163)***





இப்பாடலடிகள் இல்லத் தலைவன் மட்டுமன்றி தலைவியும் பிறர்க்குக் கொடுக்கும் பண்பினைப் பெற்றிருந்தாள் என்பதை உணர்த்தி நிற்கின்றன,

***பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப***
***விண்தோய் சிமைய விறல் வரைக் கவாஅன்***
***கிழவன் சேட் புலம் படரின் இழை அணிந்து***
***புன்தலை மடப் புலம் பிடி பரிசிலாக***
***பெண்டிரும தம் பதம் கொடுக்கும் வண் புகழ்க்***
***கண்ஊரக் கோன். (புறம் : 151)***

என்னும் பாடல் பெண்களும் பரிசில் வழங்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்பதைக் கூறுகின்றது இவ்வகையில் உலகம் போற்றும் உன்னதப் பெண்ணாம் அன்னை தெரசா அவர்கள் பொருளை அள்ளிக்கொடுக்கும் வள்ளலாக இல்லா விடினும் கொடுக்கக் கொடுக்க குறைவுபடாத அன்பை அனைவருக்கும் வழங்கி அன்னை என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

## காதல்

காதல் என்பது ஓர் உணர்வு. அது தோன்றாத காலம் இல்லை, தோன்றாத இடம் இல்லை. இத்தகு காதல் ஆண் பெண் இருபாலரிடத்தும் தக்கவயது வந்தவுடன் இயற்கையாகத் துளிர்விடும். உலகத்தின் ஒப்பற்ற ஓர் உன்னத உணர்வே காதலாகும்.

***நிலத்தினும் பெரிதே வானினும் உயந்தன்று***
***நீரினும் ஆர் அளவின்றே சாரல்***
***கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. (குறு:3)***

என்னும் பாடல் தலைவி தலைவன் மீது கொண்டிருந்த உயர் அன்பின் ஆழத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

***யாயும் ஞாயும் யார் ஆகியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்***
***செம்புலப் பெயல் நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே. (குறு:40)***

என்ற பாடல் செம்மண்ணோடு கலந்த மழை நீரை வண்ணம் வேறாகவும், நீர் வேறாகவும் எவ்வாறு பிரிக்கமுடியாதோ அதுபோல அன்பு கொண்ட நம் இரு உள்ளங்களைப் பிரிக்க முடியாது என்று தங்கள் காதல் சிறப்பினைக் கூறுகிறான் தலைவன். இத்தகு காதல் களவு வாழ்க்கையாக, உடன்போக்காக அல்லது கற்பு வாழ்க்கையாக அன்று முதல் இன்று வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இன்றைய காலங்களில் காதலால் இணைந்த இரு உள்ளங்கள் சாதி, சமயத்தைக் கடந்து கலப்புத் திருமணம் செய்து கொள்கின்றனர். தங்களின் மண வாழ்க்கையை பெற்றோர்கள் ஏற்க மறுத்தாலும், கலப்புத் திருமணத்தால் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் ஒரு காரணியாக விளங்குகின்றனர்.

***அப்பா உண்மையில் அவரும் என்போல்***
***மனித சாதி மந்தி அல்லர்***
***காக்கை அல்லர் கரும் பாம்பல்லர்***

*சாதி சற்றும் என்நினைவில் இல்லை*
*மாதுநான் தமிழனின் மகளாத லாலே.*

என்ற புரட்சிக்கவியின் கலப்பு மணம் வாழ்க என்ற தலைப்பில் அமைந்தபா இம்மணத்திற்குச் சான்றாகின்றது.

**நிறைவாக**

*நீணிலத் தெங்கனும் இல்லை*
*எனக்கு நீ துணை அன்றோ? - இங்கு*
*உனக்கு நான் துணை அன்றே ?*
*வழிதனில் உளது அழகே - என்*
*நீ உடல் உயிர்நானெ - நாம்*
*நிறை மாமலர் தேனே*
*ஓய்விலை நமதன்பும் - இங்கு*
*ஓழிய வில்லை பேரின்பம்*